

வீரவசந்தராயர் மண்டபம், புதுப்பொலிவுடன்...

தமிழ்நாடு அரசு

இந்து சமய அறநிலையத்துறை

## அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை

# திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ் - 2026



நாள்: 17.09.2026 வியாழக்கிழமை

நேரம்: காலை மணி 7.40-க்கு மேல் மணி 8.10-க்குள்




## சேவைக்கட்டளைகள்

### ஒரு கால அபிஷேகம் மற்றும் பூஜைத் திட்டம்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அம்மன் சுவாமிக்கு ஒருகால அபிஷேகம் மற்றும் பூஜைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ.25,000/– முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்திப் பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### நெய் தீபக் கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அம்மன் சுவாமிக்கு நெய் தீபம் ஏற்றும் கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ.25,000/– முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்திப் பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### அலங்கார வண்ணத்திண்டு மாலை நித்திய சாத்துப்படிக் கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அம்மன் சுவாமிக்கு நான்கு பூஜை காலத்திலும் அலங்கார வண்ணத்திண்டு மாலை நித்திய சாத்துப்படி கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ.25,000/– முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்தி பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### உச்சிக்கால இலவச பிரசாத நிவேதனக் கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் உச்சிக்காலத்தின் போது அம்மனுக்கு பிரசாதம் நிவேதனம் செய்து பக்தர்களுக்கு வழங்க உச்சிக்கால இலவச பிரசாத நெய்வேத்தியக் கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ.15,000/– முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்திப் பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### மாலை, மலர் சாத்துப்படி செய்யும் கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அனைத்து மூர்த்திகளுக்கும் மாலை, மலர்கள் சாத்துப்படி செய்யும் கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ.15,000/– முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்திப் பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### தங்கரத புறப்பாட்டுச் சேவைக் கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் தங்கரத புறப்பாட்டுச் சேவைக் கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ.25,000/– முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்திப் பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### உபயத் திருக்கல்யாண சேவைக் கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் உபயத் திருக்கல்யாண சேவைக் கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ.25,000/– முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படி தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் கட்டளை நடத்திப் பிரசாதம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### அன்னதானக் கட்டளை

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அன்னதானக் கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் மூலம் ரூ.36,00,000/– முதலீடு செய்யும் உபயதாரர்கள், அவர்கள் விரும்பும் தேதியில் மேற்படித் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து வருடத்திற்கு ஒரு நாளில் 4000 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். இக்கட்டளைக்கு நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். நன்கொடை அளித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## அன்னதானத் திட்டம்

| | திருக்கோயில் விபரம் | ஒரு நாள் அன்னதானம் செய்வதற்கு | வருடத்தில் ஒரு நாள் அன்னதானம் செய்வதற்கு (ஒரே முறை நிரந்தர முதலீடு செய்தல்) |
|---|---|---|---|
| 1. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை அதிகபட்சம் (4000 நபர்கள்) | ரூ.1,80,000/– | ரூ.36,00,000/– |
| 2. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தெப்பக்குளம், மதுரை (100 நபர்கள்) | ரூ.4,500/– | ரூ.90,000/– |
| 3. | அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை (100 நபர்கள்) | ரூ.4,500/– | ரூ.90,000/– |
| 4. | அருள்மிகு முக்தீஸ்வரர் திருக்கோயில், தெப்பக்குளம், மதுரை (50 நபர்கள்) | ரூ.2,250/– | ரூ.45,000/– |
| 5. | அருள்மிகு திருமறைநாதர் சுவாமி திருக்கோயில், திருவாதவூர், மதுரை (50 நபர்கள்) | ரூ.2,250/– | ரூ.45,000/– |

நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி

**இணை ஆணையர் / செயல் அலுவலர்**

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை – 625 001. தபால் பெட்டி எண் : 100

தொலைபேசி எண்கள் : அலுவலகம் : (0452) 2344360, உள்துறை : (0452) 2349868, பிர்லா தங்கும் விடுதி : (0452) 2345503

இணையதளம் : https://maduraimeenakshi.hrce.tn.gov.in மின்னஞ்சல் : jceomdu_31962.hrce@tn.gov.in

**திருக்குட நன்னீராட்டிற்கு வருகைதரும் பக்தர்கள் கைபேசியை தவிர்த்து, வருகைதந்து ஒத்துழைப்பு அளிக்க அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

" சிவாகம வித்வான் "

**சிவஸ்ரீ. A.V. சந்திரசேகர சிவாச்சாரியார்** அவர்கள்

நிறுவனர், குலபதி அல்லூர் சிவாச்சாரியார் வேத சிவாகம பாடசாலை,
அல்லூர்

" சிவாகம பிரவீணா, வியாகரண சிரோமணி கயிலைமணி "

**சிவஸ்ரீ. R. நாகநாத சிவாச்சாரியார்** அவர்கள்

தலைமை அர்ச்சகர், அருள்மிகு முருகன் திருக்கோயில், லண்டன்

" சிவாகம விஸாரதா " " சிவாகமக் கலாநிதி "

**சிவஸ்ரீ. A.S. சுந்தரமூர்த்தி சிவாச்சாரியார்** அவர்கள்

முதல்வர், வேத சிவாகம சம்ஸ்கிருத பாடசாலை ஸ்ரீ ஸ்ரீ குருகுலம், பெங்களூர்

" சிவாகம ரத்தினம் " " சிவாகமக் கலாநிதி "

**சிவஸ்ரீ. R. செல்வம் பட்டர் (எ) கல்யாண சுந்தர சிவாச்சாரியார்** அவர்கள்

முதல்வர், ஸ்ரீ ஆலால சுந்தர வேத சிவாகமப் பாடசாலை, தூத்துக்குடி.

" வைகாநசக் கலாநிதி "

**ஸ்ரீ உ.வே. M.S. அனந்த சயன பட்டாச்சாரியார்** அவர்கள்

ஆகம வல்லுநர், மகாபலிபுரம்.

" வைகாநசக் கலாநிதி "

**ஸ்ரீ உ.வே. D. கோவிந்தராஜ பட்டாச்சாரியார்** அவர்கள்

ஆகம வல்லுநர், திருக்குறுங்குடி, நாங்குநேரி வட்டம்

## குறிப்பு

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் **11-09-2026** முதல் **17-09-2026** வரை இத்திருக்கோயில் ஸ்தல ஓதுவாமூர்த்திகளான, திருமுறை கலாநிதி திரு. கு. மணிகண்ட ஓதுவாமூர்த்திகள், திருமுறை கலாரத்னம் திரு. தி. அவிநாசிநாத ஓதுவாமூர்த்திகள் மற்றும் பிற தல ஓதுவாமூர்த்திகள், தமிழகம் எங்கும் உள்ள முதுபெரும் ஓதுவாமூர்த்திகள் இத்திருத்தல பக்கஇசை கலைஞர்கள் மற்றும் பக்கவாத்திய கலைஞர்களால், பன்னிரு திருமுறை முற்றோதுதல், பன்னிரு திருமுறை அகண்ட பாராயணம் மற்றும் மீனாட்சி அம்மை பிள்ளை தமிழ், அபிராமி அந்தாதி முற்றோதுதல், சிவபோக சாரம், சொக்கநாத வெண்பா, திருவிளையாடற் புராணம், திருப்புகழ் போன்ற திருத்தலச் செந்தமிழ் வேதங்களும், இத்திருத்தல மங்கல வாத்திய வித்வான்களுடன் பல இசைக் கலைஞர்களால் ஒவ்வொரு கால பூஜைகளிலும் மங்கல வாத்தியமானது இசைக்கப்பட்டும், வேத வல்லுநர்களால் நான்கு திருமறைகளும், சிவாச்சார்யார்களால் சிவாகமங்களும் ஹாலாஸ்ய மஹாத்மியம், தேவி மஹாத்மியம் ஆகியன அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருவடி கமலங்களுக்கு விண்ணப்பம் செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| மண்டல பூஜைகள் துவக்கம் | : | புரட்டாசி – 1 (18.09.2026 – வெள்ளிக்கிழமை) |
| மண்டல பூஜைகள் நிறைவு | : | புரட்டாசி – 15 (02.10.2026 – வெள்ளிக்கிழமை) |



ஆடக மதுரை அரசே போற்றி!! உ சிவமயம் கூடல் இலங்கு குருமணி போற்றி!!

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை

# திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்

### காப்புப் பாடல் - சித்தி விநாயகர்

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெய
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ
சித்தியானை தன்செய்ய பொற்பாதமே

– பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

### சோமசுந்தரக் கடவுள்

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங்
கொன்றையந்தார் தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி
மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு
மகனாகி மீன நோக்கின்
மடவரலை மணந்துலகம் முழுதாண்ட
சுந்தரனை வணக்கஞ் செய்வாம்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

### அங்கயற்கண்ணி

பங்கயற்குஅண் ணரியபரம் பரன்உருவே
தனக்குரிய படிவம் ஆகி
இங்குஅயற்கண் அகன்உலகம் எண்இறந்த
சராசரங்கள் ஈன்றும் தாழாக்
கொங்கையற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண்
டியன்மகள்போல் கோலம் கொண்ட
அங்கயற்கண் அம்மைஇரு பாதப்போது
எப்போதும் அகத்துள் வைப்பாம்.

– பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்

### தேவாரம்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

–திருஞானசம்பந்தர்

### திருத்தாண்டகம்

முளைத்தானை, எல்லார்க்கும் முன்னே தோன்றி; முதிரும் சடைமுடி மேல் முகிழ்வெண்திங்கள்
வளைத்தானை; வல் அசுரர் புரங்கள் மூன்றும், வரை சிலையா வாசுகி மா நாணாக் கோத்துத்
துளைத்தானை, சுடு சரத்தால் துவள நீறா; தூ முத்த வெண் முறுவல் உமையோடு ஆடித்
திளைத்தானை;–தென் கூடல்–திரு ஆலவா அப்ச் சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.

–திருநாவுக்கரசர்

### திருவாசகம்

பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியமன்ட லத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

–மாணிக்கவாசகர்

### திருப்புகழ்

சைவமுதற் குருவாயே சமணர்களைத் ...... தெறுவோனே
பொய்யர்உளத் தணுகானே புனிதவருட் ...... புரிவாயே
கையின்மிசைக் கதிர்வேலா கடிகமழற் ...... புதநீபா
தெய்வசற் குருநாதா திருமதுரைப் ...... பெருமாளே.

–அருணகிரிநாதர்

### மீனாட்சி பிள்ளைத்தமிழ்

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்த்து இருக்கும்
உயிர் ஓவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற் காடேந்தும்இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே

### மதுரைக்கலம்பகம்

தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றாள்
தடாதகா தேவி என்றொருபேர்
தரிக்க வந்த துவும் தனிமுத லொரு நீ
சவுந்திர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதும் தண்டமிழ் மதுரம்
கூட்டுண வெழுந்த வேட்கையால் எனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா றறிவார்
பமரம்யாழ் மிழற்ற நறவு கொப் பளிக்கும்
பனிமலர்க் குழலியர் பளிக்குப்
பானிலா முன்றிற் றூநிலா முத்தின்
பந்தரிற் கண்ணிமை யாடா
தமரர்நா டியரோ டம்மனை யாட
வையநுண் ணுசுப்பள வலவென்
றமரரு மருளுந் தெளிதமிழ்க் கூட
லடலரா வலங்கல்வே ணியனே! – குமரகுருபரர்

பேரன்புடையீர் ! வணக்கம்.

தமிழகத்தில் தேவாரப் பாடல் பெற்ற 274 சிவத்தலங்களில், பாண்டிநாட்டு பதினான்கில், திருவாப்பனூர், திருப்பரங்குன்றம், திருப்பூவணம், திருவேடகம், திருக்கொடுங்குன்றம் ( பிரான்மலை ) திருப்புத்தூர், திருப்புவனவாயில், திருச்சுழியல், திருக்கானப்பேர் (காளையார்கோவில்), திருஆடானை, திருவிராமேச்சுரம், திருநெல்வேலி மற்றும் திருக்குற்றாலம் என்னும் பதின்மூன்று சிறந்த சிவத்தலங்கள் தன்னைச் சூழ, அவற்றின் நடுநாயகமாக தாமரை மலரின் மொட்டு போல் அமைந்த தலம் மதுரையம்பதி ஆகும். இம்மதுரையம்பதி மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்ற தலமாகும்.

பாண்டிய நாட்டுத் தலைநகரமாம் மதுரை, தலச்சிறப்புகள் பலவற்றைக் கொண்டது. இத்தலம் மதுரை, ஆலவாய், கடம்பவனம், கூடல்நகர், நான்மாடக்கூடல், கன்னிபுரீசம், சிவராஜதானி, சிவநகரம், சமட்டிவிச்சாபுரம், சீவன்முத்திபுரம், சிவலோகம், துவாதசாந்தபுரம் முதலிய பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. கேட்க முக்திதரும் தலம். உமையம்மை தடாதகைப் பிராட்டியாகவும், சிவபெருமான் சோமசுந்தரபாண்டியராகவும், முருகப்பெருமான் உக்கிரபாண்டியராகவும் திருவுருக்கொண்டு அருளாட்சி செய்த திருத்தலம். மூர்த்தி நாயனார் விபூதி, உருத்திராக்கம், சடாமுடி என்ற மூன்றையும் துணையாகக் கொண்டு மும்மையால் உலகாண்ட தலம். அரிமர்த்தன பாண்டியனிடம் மாணிக்கவாசகர், தென்னவன் பிரமராயன் என்னும் பெயருடன் மந்திரியாய் இருந்து ஆட்சி செலுத்திய தலம். திருஞானசம்பந்தர் அனல்வாதம், புனல்வாதம் செய்தும், திருநீற்றுப் பதிகம்பாடி கூன்பாண்டிய மன்னனின் வெப்புநோயைத் தீர்த்தும் அவனை நின்றசீர் நெடுமாறனாக்கி, சைவ சமயத்தைத் தழைக்கச் செய்த தலம். திருஞானசம்பந்தரின் வரலாறு கேட்டு பால் சுரக்கப்பெற்ற தலையன்பினராகிய மங்கையர்க்கரசியாரும், சைவம் தழைக்க அனுகூலராயிருந்த குலச்சிறையாரும் வாழ்ந்தத் தலம். இறையனார் புலவர்களோடு சங்கமேறிப் புலவராய் வீற்றிருந்து, தமிழாய்ந்த தலம். சேரமான் பெருமாள் நாயனாரிடத்து பாணபத்திரன் பொருட்டு, பெருமான் திருமுகப்பாசுரம் எழுதி அருளிய தலம். சிவபூஜையின் மகிமையை உலகம் அறிந்து ஏற்றம் பெறும் வண்ணம் சோமசுந்தரப் பெருமான், தாமே தம்மை ஆன்மார்த்த மூர்த்தியாகப் பிரதிட்டை செய்து பூசித்த இம்மையிலும் நன்மை தருவார் எழுந்தருளிய தலம். இறையனார் புலவராகவும், வளையல் விற்பவராகவும், விறகு விற்பவராகவும், திருவிளையாடல் செய்ததோடன்றி, பணியாளாக வந்து இத்தலத்தின் மண்ணைத் தலைமேல் சுமந்த பேற்றினைப் பெற்ற தலம். சக்தி பீடங்கள் 64-ல் ஒன்றான மீனாட்சி பீடத்தை உடைய சக்திக்கு பிரதானத்தலம், இராமர், இலட்சுமணன், சீதை, அனுமன், இந்திரன், வருணன் ஆகியோரும், சேர, சோழ, பாண்டிய, நாயக்க மன்னர்களாலும், அகத்தியர் போன்ற முனிவர்களாலும் பூஜித்து பேறு பெற்ற தலமாகிய மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் நன்னீராட்டுப் பெருவிழாவானது,

நலந்திகழ் ஸ்ரீ பராபவ வருடம் ஆவணி மாதம் 31-ஆம் தேதி (17.09.2026) வியாழக்கிழமை சஷ்டி திதியும், அனுஷ நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில், அன்று காலை மணி 7.40-க்கு மேல் மணி 8.10-க்குள் கன்யா லக்கனத்தில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரருக்கு திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற உள்ளதால், பக்த கோடி பெருமக்களும், ஆன்மிக மெய்யன்பர்களும் திரளாகக் கலந்து கொண்டு, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரின் திருவருளைப் பெற வேண்டிக்கொள்கிறோம்.

**அறங்காவலர் குழுத்தலைவர் மற்றும்
அறங்காவலர்கள்**
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்
மதுரை

**இணை ஆணையர் / செயல் அலுவலர்**
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்
மதுரை

**திருக்கோயில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்**

# அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை

## தல புராணம்

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் ஆதியில் சொக்கநாதர், சொக்கலிங்கப் பெருமான், சுந்தரேஸ்வரர், மீனாக்ஷிசுந்தரர், சோமசுந்தரர், கல்யாணசுந்தரர், சண்பகசுந்தரர், அட்டாலைச்சேவகன், அடியார்க்கு நல்லான், அதிரவீசி விளையாடுவான், அபிடேகச் சொக்கர், கடம்பவனச் சொக்கர், புழுகு நெய்ச் சொக்கர், கடம்பவனேசர், கற்பூரச் சொக்கர் என்று பல பெயர்களால் அழைக்கப்பட்டார். அதுமட்டுமல்லாமல் சங்கப்புலவராக வீற்றிருந்தபோது, பேராலவாயர் என்றும், கல்வெட்டுகளில் இப்பெருமான் அழகிய சொக்கநாதர், திருஆலவாய் உடைய நாயனார், மதுரை உடையார், திருவாலவாயுடையார், அதிரவீசி விளையாடுவார், சொக்கநாதசுவாமி, சொக்கநாயக ஈஸ்வரமுடையார், திருவாலவாயுடைய தம்பிரானார், மாதேவரழகிய சொக்கநாதரான சுந்தரபாண்டிய சோழக்கோனார் என்ற பெயர்களாலும் குறிக்கப்பெறுகிறார்.

இப்பதியில் அருள்பாலிக்கும் அன்னை அருள்மிகு மீனாட்சியம்மையாவார்.

அங்கயற்கண்ணியம்மை என்றும் அழைக்கப்படுகிறார். இதற்கு மீன்போன்ற கண்ணையுடையவள் என்பது பொருள். மீன் தனது முட்டைகளைத் தன் பார்வையினாலேயே தன்மயமாக்குவதுபோலத் தேவியாரும், தம்மைத் தரிசிக்கவரும் அடியார்களை அருட்கண்ணால் நோக்கி ஊழ்வினை போக்கி மகிழ்விக்கிறார். மீன் கண்ணுக்கு இமையில்லாமல் இரவும் பகலும் விழித்துக் கொண்டிருப்பது போலத் தேவியும் கண்ணிமையாமல் உயிர்களை எப்போதும் காத்து வருகிறாள். பச்சைத்தேவி, மரகதவல்லி, தடாதகைப் பிராட்டி, அபிடேகவல்லி, அபிராமவல்லி, கயற்கண்குமாரி, கற்பூர வல்லி, குமரித்துறையவள், கோமகள், மாணிக்கவல்லி, மும்முலைத் திருவழுதி மகள் முதலிய திருப்பெயர்களாலும், திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார் என்னும் பெயராலும் அழைக்கப்படுகிறார். மீனாட்சி சுந்தரர் என்பதற்குச் சொல்லும் பொருளுமாய் விளங்குபவர் என்ற பொருளும் உண்டு என்று திருவிளையாடற் புராணம் பகர்கின்றது.

இத்தலத்தில் பொற்றாமரைக்குளம், எழுகடல், வைகை, தெப்பக்குளம், புறத்தொட்டி நின்மாலியதீர்த்தம், கொண்டாழி, கிருதுமால் என்னும் ஏழு தீர்த்தங்கள் அமையப் பெற்றுள்ளன. அவற்றுள் முதன்மையானது சிவகங்கை என்னும் பொற்றாமரைக் குளமாகும். இது ஆதிதீர்த்தம், ஞானதீர்த்தம், முக்திதீர்த்தம், உத்தம தீர்த்தம் என்றும் வழங்கப்படும். இத்தீர்த்தம் இந்திரன் சிவபெருமானை வழிபட பொன்மலர்களை அருளிய சிறப்புடையதாகும். உலகப் பொதுமறையான திருக்குறள் இத்தலத்தில் சங்கப்பலகையில் வைத்து அரங்கேற்றம் பெற்றச் சிறப்பைப் பெற்றது. சிவபெருமான் நாரைக்கு அருளிய வரத்தின்படி இன்றளவும் மீன் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் இல்லாத சிறப்பை உடையது. சிவபெருமான், இந்திரன் பழிதீர்த்தல் முதலிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களை நிகழ்த்தியருளிய இத்திருத்தலத்தில், திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறுகிறது.



# திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவிற்கு வருகை தரும் ஆன்மிகச் சான்றோர்கள்

காஞ்சி காமகோடி பீடத்தின்
70 வது பீடாதிபதி
**ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்** அவர்கள்

சிருங்கேரி சாரதா பீடத்தின்
36 வது பீடாதிபதி
**ஜகத்குரு ஸ்ரீ பாரதி தீர்த்த சுவாமிகள்** அவர்கள்

கூனம்பட்டி
கல்யாணபுரி ஆதீனம் 57-வது
குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ ராஜ சரவண மாணிக்கவாசக சுவாமிகள்** அவர்கள்

மருதுறை குருக்கள்பாளையம் ஆதீனம்
**ஸ்ரீலஸ்ரீ ஆலால சுந்தர பண்டித குரு சுவாமிகள்** அவர்கள்

மெய்கண்ட சந்தானம்
திருப்பேரூராதீனம் 25-வது
குரு மஹா சந்நிதானம், கயிலைப்புனிதர்
**ஸ்ரீலஸ்ரீ சாந்த லிங்க மருதாசல அடிகளார்** அவர்கள்

கௌமார மரபு வண்ணச்சரபம்
தண்டபாணி சுவாமிகள் வழி வழி
**ஸ்ரீலஸ்ரீ இராமானந்த குமரகுருபர சுவாமிகள்** அவர்கள்

திருக்கயிலாயப் பரம்பரை
தருமபுர ஆதீனம் 27-வது குரு மஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்** அவர்கள்

திருக்கயிலாயப் பரம்பரை
திருவாவடுதுறை ஆதீனம் 24-வது குரு மஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்** அவர்கள்

புனிதமிக்க
மதுரை ஆதீனம் 293- வது குரு மஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர தேசிக ஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்** அவர்கள்

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்
46-வது குரு மஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்** அவர்கள்

பெருங்குளம்
செங்கோல் ஆதீனம் திருமடம் 103-வது குரு மஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமாச்சாரிய சுவாமிகள்** அவர்கள்

திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர்
**ஸ்ரீலஸ்ரீ சபாபதி தம்பிரான் சுவாமிகள்** அவர்கள்

# திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவிற்கு வருகை தரும் ஆகமப் பண்டிதர்கள்

"சிவப்ரதிஷ்டா பாஸ்கர கலைமாமணி"
**சிவஸ்ரீ S. தங்கம் பட்டர் (எ) சந்திரசேகர சிவாச்சாரியார்** அவர்கள்
அர்ச்சகர், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.

"விகாஸ் ரத்னா, சிவாகமச் செம்மல்"
**சிவஸ்ரீ. டாக்டர். K. பிச்சை சிவாச்சாரியார்** அவர்கள்
முதல்வர், வேத சிவாகமப் பாடசாலை சிவநெறிக் கழகம், பிள்ளையார்பட்டி

" சாக்த ரத்னாகரம் "
**சிவஸ்ரீ. கோ. சோ. சபேச சிவாச்சாரியார்** அவர்கள்
முதல்வர், ஞானாக்ஷி வேத சிவாகமப் பாடசாலை, மயிலாடுதுறை

| | | |
|---|---|---|
| ஆவணி 29<br>(15.09.2026)<br>செவ்வாய்கிழமை | காலை 7.00 - 7.30<br>7.30 - 8.00, 8.00 - 8.30<br>8.30 மணி முதல்<br>11.30 மணி வரை | மங்கல இசை<br>வேத பாராயணம், திருமுறை பாராயணம்<br>விசேஷ சந்தி, விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம்<br>எட்டாம் கால வேள்வி, த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி<br>தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 4.00 - 4.30<br>4.30 - 5.00, 5.00 - 5.30<br>5.30 மணிமுதல்<br>8.00 மணிவரை | மங்கல இசை<br>வேத பாராயணம், திருமுறை பாராயணம்<br>விசேஷ சந்தி, விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம்,<br>ஒன்பதாம் கால வேள்வி, த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி<br>தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| ஆவணி 30<br>(16.09.2026)<br>புதன்கிழமை | காலை 3.35 - 4.00<br>4.00 மணி முதல்<br>5.00 மணி வரை<br><br>5.00 மணி முதல்<br>6.00 மணி வரை<br>7.30 - 8.00<br>8.00 - 8.30, 8.30 - 9.00<br>9.05 மணிமுதல்<br>11.30 மணிவரை | மங்கல இசை<br>விக்னேச்வர பூஜை (புண்யாஹவாசனம்)<br>பத்தாம் கால வேள்வி, த்ரவ்யாஹுதி, பரிவார யாகசாலை<br>மஹாபூர்ணாஹுதி, தீபாராதனை உடன் பரிவார கலசங்கள் புறப்பாடு<br>பரிவார மூர்த்திகள் மஹாகும்பாபிஷேகம்,<br>தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்<br>மங்கல இசை<br>வேத பாராயணம் திருமுறை பாராயணம்<br>விசேஷ சந்தி, விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம்,<br>பத்தாம் கால வேள்வி, த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி,<br>தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 3.30 - 4.00<br>4.00 - 4.30, 4.30 - 5.00<br>5.00 மணிமுதல்<br>8.30 மணிவரை | மங்கல இசை<br>வேத பாராயணம், திருமுறை பாராயணம்<br>விசேஷ சந்தி, விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம்,<br>பதினொன்றாம் கால வேள்வி, பிம்பசுத்தி, நாடிசந்தானம்,<br>(இறைவனின் அருள் சக்திகளை நாடியின் வழியே இறைவனின்<br>திருமேனியில் எழுந்தருளச் செய்தல்) ஸ்பர்சாஹுதி,<br>த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல்<br>திருப்பரங்குன்றம் அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி மதுரைக்கு எழுந்தருளுதல் |
| ஆவணி 31<br>(17.09.2026)<br>வியாழக்கிழமை | அதிகாலை 3.35 மணிக்கு<br>4.00 மணிமுதல்<br>5.45 மணிவரை<br><br>7.40 மணிக்கு<br><br>7.55 மணிக்கு<br>8.10 மணிக்கு<br><br><br>மாலை 4.00 மணி<br>7.00 மணி | மங்கல இசை<br>விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம்,<br>பன்னிரெண்டாம் கால வேள்வி, த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி,<br>தீபாராதனை, யாத்ராதானம், கலசங்கள் புறப்பாடு<br>**அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் தங்க விமானங்கள்**<br>மற்றும் **இராஜகோபுரங்கள் சமகால மஹாகும்பாபிஷேகம்**<br>**மூலவர் ஸ்ரீ மீனாட்சி அம்மன் மஹாகும்பாபிஷேகம்**<br>**மூலவர் ஸ்ரீ சுந்தரேசுவரர் சுவாமி மஹாகும்பாபிஷேகம்**<br>உடன் மஹா தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல்<br>மூலவர் மஹா அபிஷேகம், தீபாராதனை<br>பஞ்சமூர்த்திகள் மாசி வீதி திருவீதி உலா, ஆச்சாரிய எஜமான உற்சவம்<br>திருப்பரங்குன்றம் அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி விடைபெறுதல் |

**மஹாகும்பாபிஷேக ஸர்வஸாதகம்**

" சிவாகம சிரோமணி " சிவாகம கலாநிதி

சிவஸ்ரீ. K. **சந்திரசேகர பட்டர் (எ) ராஜா பட்டர்**

இரண்டாம் ஸ்தானீகம் :

அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்.

அர்ச்சகர், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

முதல்வர், ஸ்ரீஸ்கந்த குரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.

**ஸ்தானீக பட்டர்கள்**

1. சிவஸ்ரீ C. **ஹாலாஸ்ய நாத பட்டர்**
2. சிவஸ்ரீ K. **வேலாயுத பட்டர்**
3. சிவஸ்ரீ M. **சுவாமிநாத பட்டர்**

தமிழ்நாடு அரசு

இந்து சமய அறநிலையத்துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## திரு. **ச. ஜோசப் விஜய்** அவர்களின்

**சீர்மிகு நல்லாட்சியில் நடைபெறும்**

திருக்குட நன்னீராட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிப்பவர்கள்

மாண்புமிகு
எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர்
திரு. **சி.டி.ஆர். நிர்மல் குமார்** அவர்கள்

மாண்புமிகு
உயர் கல்வித்துறை அமைச்சர்
திரு. **பெ. விஸ்வநாதன்** அவர்கள்

மாண்புமிகு
இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
திரு. **சீ. ரமேஷ்** அவர்கள்

திரு. **சு. வெங்கடேசன்** அவர்கள்
நாடாளுமன்ற உறுப்பினர், மதுரை

திரு. **பி. மாணிக்கம் தாகூர்** அவர்கள்
நாடாளுமன்ற உறுப்பினர், விருதுநகர்

திரு. **தங்க தமிழ்செல்வன்** அவர்கள்
நாடாளுமன்ற உறுப்பினர், தேனி

திரு. **மதார் பதுருதின்** அவர்கள்
மதுரை மத்திய சட்டமன்ற உறுப்பினர்

திரு. **அ. கல்லாணை** அவர்கள்
மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர்

திரு. **எஸ்.ஆர். தங்கப்பாண்டி** அவர்கள்
மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர்

திரு. **சோ. கார்த்திகேயன்** அவர்கள்
மதுரை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர்

திரு. **எம். வி. கருப்பையா** அவர்கள்
சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர்

திரு. **எம்.எம். கோபிசன்** அவர்கள்
மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர்

திரு. **ம. விஜய்** அவர்கள்
உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர்

திரு. **மு. மணிமாறன்** அவர்கள்
திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினர்

திரு. **தி. நாகராஜன்** அவர்கள்
மாநகராட்சி மேயர் (பொ.)/ துணை மேயர்

திரு. **செ. மாரிமுத்து** அவர்கள்
கூடுதல் ஆணையர், (பொது), இந்து சமய அறநிலையத்துறை

திரு. **செ. மாரியப்பன்** அவர்கள்
இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, மதுரை

திரு. **ஆர். சந்திரசேகர்** அவர்கள்
செயற் பொறியாளர்
இந்து சமய அறநிலையத்துறை மதுரை

திரு. **குமரன்** அவர்கள்
உதவி செயற் பொறியாளர் திருப்பணி, (ஓய்வு)
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,மதுரை.

திரு. **பி. மாணிக்கராஜன்** அவர்கள்
உதவி செயற் பொறியாளர், மின் (ஓய்வு)
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

திரு. **ஜெ. குமரகுருபரன்** இ.ஆ.ப. அவர்கள்
அரசு செயலாளர்
வணிகவரி பதிவுத்துறை மற்றும் அறநிலையங்கள் துறை

டாக்டர். **டி.ஜி. வினய்** இ.ஆ.ப. அவர்கள்
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை

திருமதி. **டி. ரத்னா** இ.ஆ.ப. அவர்கள்
கூடுதல் ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை

முனைவர். **துரை. இரவிச்சந்திரன்** இ.ஆ.ப. அவர்கள்
கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), இந்து சமய அறநிலையத்துறை

திரு. **நிஷாந்த் கிருஷ்ணா** இ.ஆ.ப. அவர்கள்
மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை

திருமதி. **என். பொன்மணி** இ.ஆ.ப. அவர்கள்
கூடுதல் ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, திருச்சிராப்பள்ளி

திரு. **கௌரவ் குமார்** இ.ஆ.ப. அவர்கள்
மதுரை மாநகராட்சி ஆணையாளர்

திரு. **பொ. ஜெயராமன்** அவர்கள்
கூடுதல் ஆணையர் (திருப்பணி), இந்து சமய அறநிலையத்துறை

திருமதி. **ஆர். வான்மதி** அவர்கள்
கூடுதல் ஆணையர் (தலைமையிடம்), இந்து சமய அறநிலையத்துறை

திருமதி. **சி. கல்யாணி** அவர்கள்
கூடுதல் ஆணையர் (விசாரணை), இந்து சமய அறநிலையத்துறை

திரு. **எஸ். சிவக்குமார்** அவர்கள்
கூடுதல் ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள்)
இந்து சமய அறநிலையத்துறை

திரு. **க. செல்லத்துரை** அவர்கள்
இணை ஆணையர் / செயல் அலுவலர்
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

திரு. **இரா. பொன்சுவாமிநாதன்** அவர்கள்
துணை ஆணையர் / நகை சரிபார்ப்பு அலுவலர்
இந்து சமய அறநிலையத்துறை, மதுரை

திரு. **இரா. முத்துராமலிங்கம்** அவர்கள்
உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, மதுரை

திரு. **சீ. மெய்வேல்** அவர்கள்
உதவி ஆணையர் / நேர்முக உதவியாளர்
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

திரு. **ச. சுப்பிரமணியன்** அவர்கள்
உதவி செயற் பொறியாளர், திருப்பணி (ஓய்வு)
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

# நிகழ்ச்சி நிரல்

| நாள் | நேரம், இடம் | நிகழ்ச்சி |
|---|---|---|
| ஆவணி 20<br>(06.09.2026)<br>ஞாயிற்றுக்கிழமை | காலை 6.30 மணி - 7.00<br>7.00 மணிமுதல்<br>11.00 மணிவரை<br>சித்தி விநாயகர் சன்னதி | மங்கல இசை<br>எஜமான அனுக்ஞை, பிராஹ்மண அனுக்ஞை (அனுமதி பெறுதல்)<br>விக்னேச்வர பூஜை (விநாயகர் வழிபாடு)<br>புண்யாஹவாசனம் (புனித நீர் தெளித்தல்) கஜ பூஜை,<br>கோ பூஜை, தன பூஜை,<br>மஹாகணபதி ஹோமம் (விநாயகர் யாகவேள்வி)<br>தேவதா அனுக்ஞை (இறை அனுமதி பெறுதல்)<br>த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி<br>திருமுறை விண்ணப்பம், தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 6.05 மணி முதல்<br>8.30 மணி வரை<br>வீரவசந்தராயர் மண்டபம் | மங்கல இசை, கிராம சாந்தி, திருமுறை விண்ணப்பம்,<br>தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் |
| ஆவணி 21<br>(07.09.2026)<br>திங்கட்கிழமை | காலை 7.00 மணி முதல்<br>10.00 மணி வரை<br>கம்பத்தடி மண்டபம், ஆடி வீதி | மங்கல இசை, நவக்கிரக ஹோமம் (நவகோள்யாக வேள்வி)<br>திசா ஹோமம் (திசைக்காவலர் வழிபாடு)<br>த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி, திருமுறை விண்ணப்பம்,<br>தீபாராதனை (பேரொளி வழிபாடு) திருநீறு திருவமுது<br>பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 6.00 மணி முதல்<br>8.00 மணி வரை<br>சித்திரை வீதி, கம்பத்தடி மண்டபம் | மங்கல இசை, ப்ரவேச பலி (எண் திசை வழிபாடு)<br>ரக்ஷோக்ன ஹோமம், திருமுறை விண்ணப்பம்,<br>தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| ஆவணி 22<br>(08.09.2026)<br>செவ்வாய்கிழமை | காலை 8.30 மணி முதல்<br>11.30 மணி வரை<br>ஆடி வீதி, கம்பத்தடி மண்டபம் | மங்கல இசை, சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம்<br>ஸம்ஹிதா ஹோமம், திருமுறை விண்ணப்பம்,<br>தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 6.00 மணி முதல்<br>8.00 மணி வரை<br>வீர வசந்தராயர் மண்டபம் | மங்கல இசை<br>வாஸ்து சாந்தி (நிலத்தேவர் வழிபாடு) திருமுறை விண்ணப்பம்,<br>தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| ஆவணி 23<br>(09.09.2026)<br>புதன்கிழமை | காலை 7.00 மணி முதல்<br>9.30 மணி வரை<br>வைகை ஆறு | மங்கல இசை<br>தீர்த்த சங்கிரஹணம் (புனித நீர் எடுத்தல்)<br>திருமுறை விண்ணப்பம், தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 5.00 மணி முதல்<br>7.00 மணி வரை<br>வைகை ஆறு | மங்கல இசை<br>ம்ருத்சங்கிரஹணம் (புனித மண் எடுத்தல்)<br>திருமுறை விண்ணப்பம், தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| ஆவணி 24<br>(10.09.2026)<br>வியாழக்கிழமை | காலை 8.00 மணி முதல்<br>10.00 மணி வரை<br>பொற்றாமரை குளம் (மேற்கு) | மங்கல இசை<br>ஆச்சார்ய தசவித ஸ்நானம்,<br>(ஆச்சார்ய பத்து விதமான தூய்மை நீராடல்)<br>திருமுறை விண்ணப்பம், தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 6.00 மணி முதல்<br>7.15 மணி வரை<br>பிரதான யாகசாலை | மங்கல இசை<br>அங்குரார்ப்பணம் (முளைப்பாரி இடுதல்)<br>பிரதான ஆச்சார்யர்கள் & ஸ்தல ஆச்சார்யர்கள் ரக்ஷாபந்தனம்,<br>(கங்கணம் கட்டுதல்) தீபாராதனை (பேரொளி வழிபாடு)<br>திருநீறு திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| ஆவணி 25<br>(11.09.2026)<br>வெள்ளிக்கிழமை | காலை 7.00 மணி முதல்<br>10.00 மணி வரை<br>யானை மஹால்<br>100 கால் மண்டபம்<br>பழைய திருக்கல்யாண மண்டபம்<br>யாகசாலை | மங்கல இசை<br>விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம், அக்னி ஸங்க்ரஹணம்,<br>(சூரியனிடமிருந்து யாகத்திற்கு அக்னி எடுத்தல்)<br>பரிவார கலாகர்ஷணம், யாகசாலை நிர்மாணம்,<br>ஆச்சார்ய வர்ணம்,<br>தீபாராதனை (பேரொளி வழிபாடு) திருநீறு, திருவமுது பிரசாதம்<br>வழங்குதல் |
| | மாலை 4.00 - 4.35<br>4.35 மணி முதல்<br>8.30 மணி வரை<br>கம்பத்தடி மண்டபம் | மங்கல இசை<br>விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம் (புனித நீர் தெளித்தல்)<br>கும்பாலங்காரம் (திருக்குட வழிபாடு)<br>கலாகர்ஷணம் (இறை சக்தியை திருக்குடத்தில் எழுந்தருளச்செய்தல்)<br>யாகசாலை ப்ரவேசம், கடஸ்தாபனம், முதற்கால வேள்வி,<br>பூர்ணாஹுதி, தீபாராதனை, (பேரொளி வழிபாடு)<br>திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| ஆவணி 26<br>(12.09.2026)<br>சனிக்கிழமை | காலை 7.00 - 7.30<br>7.30 - 8.00<br>8.00 - 8.30<br>8.30 மணிமுதல்<br>11.30 மணிவரை | மங்கல இசை<br>வேத பாராயணம்,<br>திருமுறை பாராயணம்<br>விசேஷ சந்தி, விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம்,<br>இரண்டாம்கால வேள்வி, த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி,<br>தீபாராதனை, (பேரொளி வழிபாடு)<br>திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 4.00 - 4.30<br>4.30 - 5.00, 5.00 - 5.30<br>5.30 மணிமுதல்<br>8.00 மணிவரை | மங்கல இசை<br>வேத பாராயணம், திருமுறை பாராயணம்,<br>விசேஷ சந்தி, விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம்,<br>மூன்றாம் கால வேள்வி, த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை<br>(பேரொளி வழிபாடு) திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| ஆவணி 27<br>(13.09.2026)<br>ஞாயிற்றுக்கிழமை | காலை 7.25 - 8.00<br>8.00 - 8.30, 8.30 - 9.00<br>9.00 மணி முதல்<br>12.00 மணி வரை | மங்கல இசை<br>வேத பாராயணம், திருமுறை பாராயணம்<br>விசேஷ சந்தி, விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம்,<br>நான்காம் கால வேள்வி, த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி,<br>தீபாராதனை (பேரொளி வழிபாடு),<br>திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 4.30 - 5.00<br>5.00 - 5.30, 5.30 - 6.00<br>6.05 மணி முதல்<br>8.30 மணி வரை | மங்கல இசை<br>வேத பாராயணம், திருமுறை பாராயணம்<br>விசேஷ சந்தி, விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம்,<br>ஐந்தாம் கால வேள்வி, த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி<br>தீபாராதனை (பேரொளி வழிபாடு),<br>திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| ஆவணி 28<br>(14.09.2026)<br>திங்கட்கிழமை | காலை 7.30 - 8.00<br>8.00 - 8.30, 8.30 - 9.00<br>9.05 மணி முதல்<br>12.00 மணி வரை | மங்கல இசை<br>வேத பாராயணம், திருமுறை பாராயணம்<br>விசேஷ சந்தி, விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம்,<br>ஆறாம் கால வேள்வி, த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி<br>தீபாராதனை (பேரொளி வழிபாடு),<br>திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 4.00 - 4.30<br>4.30 - 5.00, 5.00 - 5.30<br>5.30 மணிமுதல்<br>8.30 மணிவரை | மங்கல இசை<br>வேத பாராயணம், திருமுறை பாராயணம்<br>விசேஷ சந்தி,<br>விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம், விநாயகர் முதலான<br>பரிவார மூர்த்திகளுக்கு பிம்பசுத்தி (தெய்வதிருமேனி சுத்தி), ரக்ஷாபந்தனம்<br>ஏழாம் கால வேள்வி, த்ரவ்யாஹுதி, பூர்ணாஹுதி தீபாராதனை<br>பேரொளி வழிபாடு திருநீறு, திருவமுது பிரசாதம் வழங்குதல் |